1971 ஜூலை 23]

பொழுது அதற்கு 50,000 ரூபாய் நிதி ஒதுக்கி காரியங்களை செய்ய ஏற்பாடு செய்வதாக சொன்னர்கள். அது இந்த அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அது தற்பொழுது இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Can this Government think of constructing a loding in Ootacamund for the low, income group people so that they may not pay more than Rs. 3 or 4 as rent per day, as the present rent is very high in many of the hotels and guest houses there?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: உதகமண்டலத்திலே சுற்றுலா பயணிகள் மாளிகை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு வாடகை ரூபாய் 10. அதையே 2, 3 ரூபாயில் வாடகை கொடுக்கவேண்டு மானல், அப்படிப்பட்ட ஒரு திட்டம் சமீபத்திலே இந்த அரசாங்கத் திடம் இல்லை. ஆனல், கல்வித் துறையின் மூலமாக ஒரு உணவு விடுதி கட்டுவதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கிறது. அப்படி அது கட்டப்பட்டால், ஒரு படுக்கைக்கு 3, 4 ரூபாய் அளவிலே ஏற்பாடு செய்யலாம் என்ற எண்ணம் இந்த அரசின் ஆய்விலே இருக்கிறது.

உதகமண்டலத்தை சிறந்த கோடை வாசஸ்தலமாக்கல்

* 411. வின.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் நகரத்தை இன்னும் விரிவு படுத்தி மிகச் சிறந்த கோடை வாசஸ்தல நகரமாக்கிவிட வேண்டுமென்று நமது தமிழ் நாடு அரசு மத்திய சுற்றுலா கார்ப்பொரேஷனிடம் வலியுறுத்தி யுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மத்திய சுற்றுலா கார்ப்ப ரேஷன் வணிக முறையில் சுற்றுலா விடுதிகள், வாடகைக்கு சுற்றுலா ஊர்திகள் முதலியவைகளை நடத்தி வருவதால், மத்திய சுற்றுலா கார்ப்பரேஷனிடம் வலியுறுத்தவில்லை. ஆனல் உதகமண்டலம், மாமல்லபுரம் இவற்றின் வளர்ச்சிக்காக ஒரு கோடி ரூபாய் வழங்கு மாறு மைய அரசிடம் இவ்வரசு கோரியுள்ளது. அண்மையில் தமிழக அரசு உருவாக்கியிருக்கும் தமிழக சுற்றுலா வளர்ச்சி கார்ப்பரேஷன் உதகமண்டலத்திலும், மற்ற சுற்றுலா சிறப்புகள் இடங்களிலும், பயணிகளுக்காக பல வசதிகள் செய்வதற்கு திட்டங்கள் தயாரித்து வருகிறது.

திரு. சோ. கருணைநாதன்: தலைவரவர்களே, சிறந்த கோடை வாசஸ்தலமாக கருதப்படுகின்ற ஊட்டிக்கு பக்கத்திலே இருக்கின்ற குன்னூரையும், கோத்தகிரியையும் சேர்த்து இந்த அரசு கவனிக்க வேண்டும். அவைகளை முன்னேற்றம் செய்வதற்கான முயற்சிகளை இந்த அரசு கை கொள்ளுமா என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[1971 ஜூலை 23

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கோத்தகிரியிலே ஒரு "வியூ பாயின்ட்" கட்ட 2½ இலட்சம் ரூபாயிலே காரியம் நடந்து வருகிறது. அதே போல், குன்னூரிலே 12 குடில்கள் பிரயாணிகள் தங்குவதற்காக 2½ இலட்சம் ரூபாயில் கட்டப்பட்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா: உதகமண்டல நகரத்தை இன்னும் விரிவு படுத்த இந்த அரசு மேற்கொண்டிருக்கும் சிறப்பான நடவடிக்கை களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: உதகமண்டலத்தைப் பொறுத்த வரையில் மற்ற வட நாட்டு கோடை வாசஸ்தலங்களுக்கு இல்லாத ஒரு பெரிய சிறப்பு இருக்கிறது. இந்தியாவில் இருக்கின்ற கோடை வாசஸ்தலங்களிலே பல வருஷம் பூராவும் பனியாலே மூடப்பட்டு இருக்கின்றன. இங்கே அப்படி இல்லை. ஏறக்குறைய வருஷத்திலே 10 மாத காலம் சுற்றுலா பயணிகள் சென்று உதகையிலே தங்கிட எல்லா வசதிகளும், வாய்ப்புகளும் இருக்கிறது. இவைகளைப் பற்றிய விளம்பரங்களை எல்லாம் இந்த அரசு செய்து வருகிறது. அதற்காக தனி போஸ்டர்களையும், ஒரு புத்தகத்தையும் கூட வெளியிட்டு, அவைகள் எல்லா இடங்களுக்கும் அனுப்பப்பட்டு விட்டன. செப்டம்பர் மாதத்திலே கூட சில காரியங்களைச் செய்யலாம் என்று இந்த அரசு எண்ணியிருக்கிறது. கோடை காலத்திலே உதக மண்டலத்திற்கு வரும் பயணிகளை அதிகமாக கவர்ந்து ஈர்க்க வேண்டும் என்பதற்காக கோடையிலே நாடக விழா போன்றவற்றை வைத்து "கோடை விழா" ஒன்றை ஏற்பாடு செய்து, ஒரு தொகையை செலவு செய்யத் தயாராக இருக்கிறது. அதோடு இல்லாமல் அங்கே இருக்கின்ற கூட்டுறவு சங்கத்தின் மூலமாக பஸ் ஒன்றை ஏற்பாடு செய்து, ஏழை மக்களும், மற்றவர்களும் முதுமலைக்காடு வரை போய் வர வழி வகைகளை செய்திருக்கிறது.

திரு. எம். தேவராசன்: உதகமண்டலத்தை விரிவுபடுத்தியும், அழகுபடுத்தியும் வரும் இந்த அரசாங்கம், கோடை கால சட்ட மன்ற கூட்டங்களை அங்கே நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இது அரசினுடைய கொள்கை விளக்கம் பற்றிய கேள்வி ஆகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டிய கேள்வியாகும் இது.

Facilities for visitors to Kodaikanal.

* 412 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether this Government has any proposal to improve the facilities for the visitors to Kodaikanal during summer; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம். போதிய அளவு தங்குவதற்கான இடவசதிகள் அளிப்பது பற்றி அரசிடம் ஒரு செயற் குறிப்பு இருந்துவருகிறது.

(இ) இத்திட்டம் பற்றி முடிவு செய்ய தேவையான விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் உருவாக்கப்பட்ட தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் இத்திட்டத்தை ஏற்று நடத்தும்.